[1984 பிப்ரவரி 16

கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டபோது வேலையிழந்த ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்

*126. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. ம. சங்காலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்ட போது வேலையிழந்த ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில், அவர் களுக்கு அளிக்கப்பட்டு வரும் ஓய்வு ஊதியத்தோடு, (1) அரசு அவ்வப்போது அறிவிக்கும் பஞ்சப்படியையும் (2) மேற்கூறிய ஓய்வூதியம் பெறுபவர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டு மென்றும் (3) இவர்களுக்கு 1—3—1970-லிருந்து 1—5—1977 வரை நிலுவை ஓய்வூதியம் கொடுக்க வேண்டுமென்றும் முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) பஞ்சப்படியும், குடும்ப ஓய்வூதியமும் வழங்க ஆணைகள் வெளி யிடப்பட்டன. 1—3—1970-ல் இருந்து 1—5—1977 வரை நிலுவை ஓய்வூதியம் வழங்கும் கோரிக்கையை அரசு ஏற்கவில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டபோது வேலையிழந்த ஆசிரியர்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைப்பதற்காகப் போராடியவர்கள் ஏதாவது சங்கம் வைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது பற்றி விவரம் இல்லை.

1984 பிப்ரவரி 16]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலைவருக்கு எழுதினால் சரியாகச் சொல்லிவிடலாமே : (சிரிப்பு)

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகும், அங்குள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் இன்னும் சில பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிகிறது. எனவே அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு அதிகாரியை அனுப்பி அதுபற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றி அவர்கள் ஆராய்ந்துதான் இந்த முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். 1977-க்குப் பிறகு அந்த ஓய்வூதியம் கிடைக்கின்ற வகையிலே வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9—40)

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்த பிறகு ஓய்வு பெற்றவர்கள் சிலருக்கு இன்னும் ஓய்வூதியம் கொடுக்கப்படவில்லை என்பதுதான் அது. அதுபற்றி அரசிடம் முறையிடுகின்றபோது, விரிவாகப் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிற்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டைப் பகுதியிலுள்ள உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிந்து, 1—11—1956-க்கு முன் ஓய்வு பெற்ற உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களும், 1—11—1956-க்கு முன்போ, பின்போ ஓய்வு பெற்று திருவிதாங்கூர் கொச்சி மாநிலத்தில் பணியாற்றி பணிக்கொடை பெற்ற மற்றும் ஒப்படைக்கப்பட்ட மற்றும் வெளியேற்றப்பட்ட பள்ளி ஆசிரியர்கள், இவர்களுக்கு 9—7—1980ல் மேற்படி ஓய்வு ஊதியம் 1—4—1978 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ. 65லிருந்து ரூ. 100க்கு உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதற்கு முன்னாலே 1—5—1977லிருந்து ரூ. 65 வாங்கியிருக்கிறார்கள்.

விவேகானந்தா கல்லூரி, பெரியநாயக்கன்பாளையம்

* 27. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், விவேகானந்தா கல்லூரியின் நிர்வாகம், தன் போக்குக்கு வகுப்புகளையும் மாணவர் விடுதியையும் மூடியுள்ளது என்பது உண்மையா ?